# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-6** **தேதி:-09.06.2017**

**தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் நடைபயணம்**

அன்பார்ந்த தோழர்களே,

சாதிய ஆணவக் கொலைகளுக்கு எதிராக தனிச்சட்டம் கொண்டு வர வலியுறுத்தி தமிழ்நாடு தீண்டாமை தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் சார்பில் 9.6.2017 அன்று சேலத்திலிருந்து சென்னைக்கு நடைபயணம் துவங்கியது. தநாதீஒமு பொதுச்செயலாளர் கே.சாமுவேல்ராஜ் தலைமையில் நடைபயணம் காலை 11.30 மணிக்கு டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து பின் புறப்பட்டது. முன்னதாக சேலம் மாவட்ட செயலாளர் குழந்தைவேலு கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.மாநிலத் தலைவர் சம்பத் நடைபயணத்தை துவக்கி வைத்தார். இந்திய நாட்டில் சாதியப்படி நிலையில் ஜாதிகள் கட்டமைக்கப்பட்டுள்ளது எனவும் அதன் காரணமாகவே உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்று பேதம் நிலவுகிறது எனவும் இது நாட்டு வளர்ச்சியில் ஓர் பின்னடைவு எனவும் கூறினார். இந்தியாவில் அரசியலமைப்பு சட்ட ஆட்சி இல்லாமல், மனுஸ்மிருதி அடிப்படையிலான நால் வருண படி நிலை கடைபிடிக்கப்படுகிறது என்றார். அதனால் தான் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்பதும், தீண்டாமை என்பதும், தாழ்ந்த ஜாதியோடு திருமணம் நடைபெறுவதாகக் கூறி அதனைத் தடுக்கின்றனர். ஒருபடி மேலே போய் காதல் திருமணம் செய்வதால் தங்களது ஜாதியக் கௌரவம் பாதிப்பதாக தனது குழந்தையை, பாலூட்டி, சீராட்டி வளர்த்த குழந்தைகளை, அவர்களே கொலை செய்கின்றனர். கொலை செய்யப்படுபவர் பிற்படுத்தப்பட்டவராக இருப்பின் சாதாரணச் சட்டத்தில் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டு வருகிறது. எனவே சாதி ஆணவக் கொலைகளுக்கு எதிராகத் தனிச்சட்டம் இயற்றிட வலியுறுத்தி நடைபயணம் துவக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பேசிய விசிக தலைவர் தொல்.திருமாவளவன் கலந்து கொண்டு வாழ்த்தினார். தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணி தான் தலித் மக்களின் பிரச்சனைகளுக்காக களத்தில் இறங்கிப் போராட்டம் நடத்துகிறது. அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீடு விசிக போராடியிருக்கிறது. மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றியது. அருந்ததிய அமைப்புக்களும் போராடின. ஆனாலும் தீண்டாமை ஒழிப்பு முன்னணி கோரிக்கைகளை வைத்த பிறகே அரசு அந்தக் கோரிக்கையை ஏற்று ஆணையிட்டது. அதுபோலவே இன்று சாதிய ஆணவக் கொலைகளுக்கு எதிராகத் தனிச்சட்டம் கேட்கும் இந்த நடைபயணமும் நிச்சயம் ஆட்சியாளர்களின் கவனத்திற்கு போகும். ஆகவே தனிச்சட்டம் கேட்கும் இந்த நடைபயணமும் வெற்றி பெறும் என வாழ்த்துவதாகக் கூறினார்.

15 நாட்கள் நடைபெற உள்ள இந்த நடைபயணத்தில் 09.06.17 அன்று 300க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். இந்த நடைபயணத்தில் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக நமது மாநில அமைப்பு செயலாளர் தோழர் V.மணியன் பங்கேற்றுள்ளார். இந்த நடைபயண துவக்க நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட செயலாளர் தோழர் E.கோபால் தலைமையில் ஏராளமான BSNL ஊழியர் சங்க தோழர்கள் பங்கேற்றனர். அனைவருக்கும் தமிழ் மாநில சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.



[redacted]





[redacted]



வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,



(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநிலச் செயலாளர்